# பொது நியதிநிபந்தனைகள்

வாடிக்கையாளர் கணக்குகளுக்கும், கருமங்களுக்கும், கொடுக்கல்வாங்கல்களுக்கும் ஏற்புடைத்தானவை

# ஹற்றன் நஷனல் வங்கி பிஎல்சி பிகியூ 82

## பொது நியதிநிபந்தனைகள்

## வாடிக்கையாளர் கணக்குகளுக்கும், கருமங்களுக்கும், கொடுக்கல்வாங்கல்களுக்கும் ஏற்புடைத்தானவை

**1. ஏற்புடைமை**

இப்பொது நியதிநிபந்தனைகளானவை (சந்தர்ப்பம் அவ்வாறு அனுமதிக்குமிடத்து அல்லது தேவைப்படுத்துமிடத்து இதனகத்துப்பின்னர் "நியதிநிபந்தனைகள்" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதுடன், அப்பதம் அல்லது சொல்லமைப்பானது, இதனகத்து உள்ளடங்கியுள்ள ஊடு வங்கிச் சேவைகளுக்கான, இலங்கை ரூபாக்களில் அல்லது மறுவாறு குறித்தியம்பப்பட்ட நடப்புக் கணக்குகள், கால வைப்புக் கணக்குகள், சேமிப்புக் கணக்குகளுக்கான நியதிகள், நிபந்தனைகள் மற்றும் விதிகளை உள்ளடக்குதலும் வேண்டும்), ஹற்றன் ந'னல் வங்கி பிஎல்சியுடனும் (எச்என்பீ) (பதிவு இல. பிகியூ 82) (அத்துடன் இது "எச்என்பீ" அல்லது "வங்கி" எனவும் குறிப்பீடுசெய்யப்படும்), அதன் பின்னுரிமையாளர்களுடனும், சாட்டுனிகளுடனும் ஆன வாடிக்கையாளர் கணக்குகள், கருமங்கள், கொடுக்கல்வாங்கல்களுக்கு ஏற்புடைத்தாவதுடன், அப்பதம் வங்கியின் ஏதேனும் கிளையையும் உள்ளடக்குதல் வேண்டும்.

இந்த நியதிநிபந்தனைகளானவை, ஏற்ற மாற்றங்களுடன் (விடயங்கள் பற்றிய விபரங்களில் அவசியமான மாற்றங்களுடன்), தனிநபர்கள், பங்காண்மைகள், கூட்டிணைக்கப்பட்ட, கூட்டிணைக்கப்படா ஆட்குழுக்கள் உள்ளிட்ட ஆனால் அவற்றுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாது, வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

இந்த நியதிநிபந்தனைகளை மாற்றுவதற்கான, திருத்துவதற்கான அல்லது அவற்றுடன் சேர்ப்பதற்கான உரிமையை வங்கி தனக்கு ஒதுக்கியுள்ளதுடன் அத்தகைய மாற்றம், திருத்தம் அல்லது சேர்ப்பு வாடிக்கையாளர்கள் அனைவரையும் பிணிப்பதாகக் கருதப்படுதலும் வேண்டும்.
இந்த நியதிநிபந்தனைகளுக்கான திருத்தம் ஒவ்வொன்றும், எச்என்பீயின் அலுவலகமுறை இணையதளத்தில் கிடைக்கப்பெறச்செய்தல் வேண்டும்.

**2. வங்கிக் கணக்கு**

வங்கியானது, கையெழுத்திடப்பட்ட அறிவுறுத்தலின்மீது அல்லது கணக்கு ஆரம்பித்தற்கான விண்ணப்பப் படிவத்தில் கொடுக்கப்பட்ட கையெழுத்திடப்பட்ட செயற்படுத்துகை அறிவுறுத்தலுக்கமைய வரையப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட (இதனகத்துப் பின்னர் "விண்ணப்படிவம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஆவணத்தின்மீது செயற்படுதற்கு, பின்வருவன தொடர்பில் எதிர்மறையான எழுத்துமூல அறிவித்தலை வாடிக்கையாளர் வங்கிக்குக் கொடுக்கும்வரை, அதிகாரமுடையதாதல் வேண்டுமென இத்தால் உடன்பட்டுக்கொள்ளப்படுகின்றது:

(i) அத்தகைய கணக்கில் வரவுமீதி இருப்பினும் இல்லாவிடினும், அதில் பற்றுவைப்பதன்மூலம், காசோலை, நாணயமாற்று உண்டியல், வாக்குறுதிப்பத்திரம், நிலையான கட்டளை என்பனமீது பணஞ்செலுத்துதல், நேரடிப் பற்றுவைத்தல், வரைவு வழங்கல், அஞ்சல் மற்றும் தந்தி மூலம் பணமனுப்பல், பங்குப்பத்திரங்கள் மற்றும் வெளிநாட்டு நாணயம் கொள்வனவு மற்றும் விற்பனை செய்தல் அத்துடன் வேறு ஏதேனும் அறிவுறுத்தலுக்குப் பயனளித்தல் அத்துடன்

(ii) அத்தகைய கணக்கை மூடிவிடுதற்கான அறிவுறுத்தல் உட்பட, அத்தகைய கணக்குத் தொடர்பான வேறு ஏதேனும் அறிவுறுத்தலை ஏற்றுக்கொள்ளல்.

3. **காசோலைப் புத்தகம்**

(i) வங்கியானது, முற்றுமுழுதான அதன் தற்றுணிபில், ஒரு நடப்புக் கணக்குமீது காசோலைப் புத்தகமொன்றையும் வழங்கலாம். காசோலைப் புத்தகமொன்று வழங்கப்படுமிடத்து, அதன் பத்திரமான காப்புக்கு வாடிக்கையாளர் எல்லா வேளைகளிலும் பொறுப்பாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய காசோலைப் புத்தகம் அல்லது அதிலடங்கிய ஏதேனும் காசோலைத்தாள் தொலைந்துபோயின் அல்லது களவுபோயின், வங்கிக்கு அதனை உடனடியாக அறிவித்தலும் வேண்டும்.

(ii) வாடிக்கையாளர் ஒன்றில் காசோலைப் புத்தகமொன்றை அல்லது ஏதேனும் காசோலைத் தொலைத்துள்ள விடயத்தில், வங்கியானது, முற்றுமுழுதான அதன் தற்றுணிபில், காசோலையொன்றின்மீது பணக்கொடுப்பனவை நிறுத்துவதற்கான வாடிக்கையாளரின் (ஒன்றில் வாய்மொழிமூலமான அல்லது எழுத்துமூலமான) ஏதேனும் அறிவுறுத்தலை ஏற்றுக்கொள்ளும். ஏதேனும் வாய்மொழிமூலமான வேண்டுதலையடுத்து, அதே நாளிலான எழுத்துமூல உறுதிப்படுத்தல் இருத்தல் வேண்டும்.

4. **மேலதிகப்பற்று**

(i) வங்கியுடனான அவரது எவையேனும் கணக்குகள் தொடர்பில் எழும் ஏதேனும் மேலதிகப்பற்றுக்கு அல்லது வேறு வசதிகளுக்கு வாடிக்கையாளரொருவர் பொறுப்பாதல் வேண்டும் என்பதுடன், அவை தொடர்பில் உறப்பட்ட (கணிக்கப்பட்ட வட்டி உட்பட) எல்லா அல்லது ஏதேனும் வட்டியையும், தரகையும், ஏனைய வங்கிக் கட்டணங்களையும், (ஏதேனும் சட்டச் செலவுதொகை உட்பட) செலவுதொகை அத்துடன் செலவுகளையும், வங்கியால் காலத்துக்குக் காலம் அதன் முற்றுமுழுதான தற்றுணிபில் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதங்களில் அத்தகைய ஏதேனும் கணக்கில் பற்றுவைப்பதற்கு வாடிக்கையாளர் வங்கிக்கு இத்தால் குறிப்பாக அதிகாரமளித்தும் விடுகின்றார். வங்கி அதன் முற்றுமுழுதான தற்றுணிபில் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளை அத்தகைய முறையிலும் அத்தகைய நேரங்களிலும் வாடிக்கையாளர் வங்கிக்குச் செலுத்துதல் வேண்டும்.

(ii) ஒரு கணக்குத் தொடர்பில் ஒரு மேலதிகப்பற்று அல்லது வேறு வங்கிவசதிகள் வலுவில் இருக்கையில், ஏதேனும் பணத்தொகை அத்தகைய கணக்குக்கு அவ்வாறு வரவுவைக்கப்படுமிடத்து, அத்தகைய தொகையானது, செலுத்தப்படக்கூடியவாறான (கூட்டு வட்டி உட்பட) ஏதேனும் வருமதியான வட்டி முழுமையாகச் செலுத்தப்படும்வரை, அந்த வட்டியை ஈடுசெய்வதற்காக முதற்கண் பிரயோகிக்கப்படுதல் வேண்டும். அதன்பின்னர், அவ்வாறு வரவுவைக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் தொகை அத்தகைய ஏதேனும் மேலதிகப்பற்றின் அல்லது வேறு வங்கிவசதிகளின் முதல் தொகையை ஈடுசெய்வதற்காகப் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

5. **வைப்புக்களும் மீட்டுப்பெறுகைகளும்**

வைப்பும்/வைப்புக்களும் மீட்டுப்பெறுகையும்/மீட்டுப்பெறுகைகளும் இலங்கையில் தற்போது வலுவில் உள்ள சட்டங்களால் ஆளப்படும். வங்கியைத் திருப்திப்படுத்தும் வகையில் ஆளடையாளச் சான்று சமர்ப்பிக்கப்படுவதற்கமைவாகவும் காலத்துக்குக் காலம் வங்கியால் அறவிடப்படக்கூடிய எவையேனும் வழமையான கட்டணங்கள் செலுத்தப்படுவதன்மீதும், இலங்கையில் உள்ள எந்தக் கிளையிலும் பணம் மீட்டுப்பெறுதலை அனுமதிப்பதற்கு வங்கி தற்றுணிபைக் கொண்டுள்ளது.

6. **கணக்குகளைப் பேணிவருதல்**

(i) காலக்கிரம கணக்குமீதிக் கூற்றுக்கள்
வேறுவகையாக உடன்பாடு செய்யப்பட்டிருந்தாலொழிய, வங்கியால் தீர்மானிக்கப்படவேண்டிய அத்தகைய கால இடைவெளிகளில், வாடிக்கையாளரது கணக்கின் காலக்கிரம கணக்குமீதிக் கூற்றை வங்கியானது வழங்கிவரும்.

(ii) ஆட்சேபனைக்கான காலக்கெடு
வாடிக்கையாளரால் பெறப்பட்ட ஒரு காலக்கிரம கணக்குமீதிக் கூற்றின் நேர்த்தி அல்லது முழுமையற்ற தன்மை தொடர்பில் வாடிக்கையாளர் ஒருவர் கொண்டிருக்கக்கூடிய ஏதேனும் ஆட்சேபனையை சுணக்கமின்றி எழுப்பவேண்டும் என்பதுடன், எவ்வாறாயினும் அத்தகைய கூற்று

கிடைக்கப்பெற்றவுடனும் எழுத்தில் வங்கியால் பெறப்படவேண்டும். மேற்குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் ஏதேனும் ஆட்சேபனை இல்லாதிருக்குமிடத்து அந்தக் காலக்கிரம கணக்குமீதிக் கூற்று சரியானதும், பிணிப்பதானதும் ஆகக் கருதப்படுதல் வேண்டும்.

### 7. கூட்டுக் கணக்கும் பங்காண்மைக் கணக்கும்

(i) வாடிக்கையாளர் கணக்கொன்று கூட்டுக் கணக்காக இருக்குமிடத்தில், அத்தகைய கணக்கின்மீது வழங்கப்படக்கூடிய ஏதேனும் மேலதிகப்பற்று, கடன் அல்லது வேறு கடன்வசதிகள் அல்லது தகையளிப்பு என்பவற்றுடன், வட்டி, தரகு மற்றும் ஏனைய வங்கிக் கட்டணங்களுக்கும், செலவுகளுக்கும் கூட்டுக் கணக்குடையவர்கள் கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்பாதல் வேண்டும்.

(ii) கூட்டுக் கணக்குடையவர்களுள் ஒருவர் அல்லது அதற்கு மேற்பட்டோர் இறப்பெய்தும் விடயத்தில், வங்கியானது, கூட்டுக் கணக்குடையவர்களது பெயரிலுள்ள ஏதேனும் கணக்கிற்கென வங்கியால் வைத்திருக்கப்படும் அல்லது அதன் வரவில் உள்ள பணம், பிணைப்பொறுப்பு, உறுதிகள், ஆவணங்கள், மற்றும் (பாதுகாப்பு வைப்புப் பெட்டிகளும் ஏனைய பொருளடக்கங்களும் உட்பட) எத்தகைய ஏதேனும் வேறு ஆதனம் எல்லாவற்றையும், இறந்த கூட்டுக்கணக்குடையவர் அல்லது கூட்டுக்கணக்குடையவர்களின் சட்ட வாரிசுகளுக்கு அல்லது பிரதிநிதிகளுக்கு ஆற்றுப்படுத்தாது, எஞ்சியிருக்கும் கணக்குடையவருக்கு அல்லது கணக்குடையவர்களுக்கு அல்லது அவரது அல்லது அவர்களது ஆணைக்குச் செலுத்துதல் அல்லது ஒப்படைத்தல் வேண்டும்.

(iii) கூட்டுக் கணக்குடையவர்களுள் ஒருவரது அல்லது அதற்கு மேற்பட்டோரது இறப்பு பற்றிய அறிவித்தல் கிடைத்து, எத்தகைய ஏதேனும் கணக்கின் வரவில் உள்ள அல்லது அந்தக் கணக்கிற்கென வங்கியால் வைத்திருக்கப்படும் பணங்கள், பிணைப்பொறுப்புகள், உறுதிகள், ஆவணங்கள், மற்றும் எத்தகைய எவையேனும் ஏனைய ஆதனங்கள் எல்லாவற்றையும் எஞ்சியிருக்கும் கூட்டுக் கணக்குடையவருக்கு அல்லது அவரது அல்லது அவர்களது ஆணைக்குச் செலுத்துவதன்மேல், வங்கியானது கூட்டுக் கணக்குடையவர்பால் அல்லது கூட்டுக் கணக்குடையவர்களின்பால் ஆன கடப்பாடுகளிலிருந்து முழுமையாக விடுவிக்கப்படுவதாதல் வேண்டும்.

(iv) வங்கியினால் வழங்கப்பட அனுமதிக்கப்பட்ட வசதிகளைப் பயன்படுத்துவதன்மூலம் நெறிப்படுத்தப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் யாவற்றுக்கும் பங்காண்மைக்கணக்குடையவர்கள் கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்பாவர்.

### 8. சேமிப்புக் கணக்கு/ கணக்குகளுக்கான நியதிநிபந்தனைகள்

(i) வங்கியின் கிளை எதிலும் வைப்புக்கள் செய்யப்படலாம். வங்கியின் அத்தகைய கிளை எதிலும், இந்த நியதிநிபந்தனைகளின் 5ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, மீட்டுப்பெறுகைகளும் செய்யப்படலாம்.

(ii) எந்தவொரு கணக்கு நியமிக்கப்பட்ட ஆகக்குறைந்த மீதியைவிடக் குறைந்த மீதியைக் கொண்டதாகவும், 24 மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியொன்றுக்குச் செயலற்றதாகவும் இருக்கின்றதோ அந்தக் கணக்கு வங்கியால் மூடப்படலாம்.

(iii) சேமிப்புக் கணக்குகளின் வரவுக்கான காசோலை/காசோலைகள், வரைவு/வரைவுகள் அத்துடன் காசுக்கட்டளைகள் என்பன வங்கியின் தற்றுணிபில் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படலாம்.

(iv) வட்டி கணக்கிடப்படும் ஒவ்வொரு நாளிலும் கணக்கானது நியமிக்கப்பட்ட ஆகக்குறைந்த மீதியைக் கொண்டிருந்தால்மட்டும், வட்டியானது அத்தகைய நாளின் மீதியில் கணக்கிடப்பட்டு மாதாமாதம் வரவு வைக்கப்படும்.

(v) சேமிப்புக் கணக்குடையவரொருவருக்கு வைப்புப் புத்தகமொன்று வழங்கப்படும். அதன் பாதுகாப்பு, கணக்குடையவரது பொறுப்பாதல் வேண்டும். அந்த வைப்புப் புத்தகம் தொலைந்துபோயின், களவுபோயின் அல்லது தவறிப்போயின், அதுபற்றி சுணக்கமின்றி வங்கிக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்படுதல் வேண்டும். வைப்புப் புத்தகமொன்றுக்குப் பதிலாக, கொடுக்கல்வாங்கல்கள்பற்றிய இலத்திரன் கூற்றொன்றைக் கோருவதற்கான விருப்புத்தெரிவொன்றை வாடிக்கையாளர் கொண்டுள்ளார்.

(vi) ஏற்புடைத்தானவிடத்து, வைப்புச் செய்யப்பட்ட அல்லது மீட்டுப்பெறப்பட்ட பணம் எதுவும், வைப்புப் புத்தகம் கருமபீடத்தில் சமர்ப்பிக்கப்படின், வங்கியால் வைப்புப் புத்தகத்தில் பதிவுசெய்யப்படும். வங்கியைவிட்டுச் செல்லுமுன் தமது வைப்புப் புத்தகத்தில் உள்ள பதிவுகளை கணக்குடையவர் கவனமாகப் பரிசீலித்து அதில் செய்யப்பட்ட பதிவுகள் சரியானவை எனத் தம்மைத் திருப்திப்படுத்துதல் வேண்டும். ஏதேனும் முரண்பாடு இருப்பின் உடனடியாக வங்கிக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(vii) வைப்புப்புத்தகமானது, கொடுக்கல்வாங்கல்கள் அனைத்தையும் அதன்கண் பதிவு செய்வித்தற்பொருட்டு ஒவ்வோர் ஆறு மாத காலப்பகுதியில் ஆகக்குறைந்தது ஒருமுறையேனும் முன்வைக்கப்படுதல் வேண்டும். வைப்புப்புத்தகம் முன்வைக்கப்படும் தேதியிலிருந்து மூன்று (03) ஆண்டுகளுக்குமுன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் வைப்புப் புத்தகத்தில் பதிவு செய்வதன்பொருட்டு கிடைக்கப்பெறமாட்டா. நியதிச்சட்டக் காலப்பகுதியை விஞ்சும் கொடுக்கல்வாங்கல்கள்பற்றிய பதிவேடுகளை வங்கி பேணிவைத்திருக்க மாட்டாது.

(viii) இந்தப் பிரிவின்(vii) ஆம் பந்திக்கு அமைவாக, வைப்புப் புத்தகத்தில் பதிவுசெய்யப்படாக் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய கூற்றினை, தனது தற்றுணிபில், சாதாரண அஞ்சல்மூலம் அனுப்புதற்கான உரித்தை வங்கி தன்னகத்துக் கொண்டுள்ளது.

(ix) இதனகத்துப் பின்னர் "ATM" எனக் குறிப்பீடுசெய்யப்படும் தன்னியக்கச் செப்பு இயந்திரத்தில் இருந்து, அல்லது வைப்புப் புத்தகமும், சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட மீட்டுப்பெறுகைப் படிவமும் சமர்ப்பிக்கப்படுவதன்மீது, வங்கிக் கருமபீடத்தில் இருந்து, கணக்குடையவரால் பணம் மீட்டுப்பெறப்படலாம். கருமபீட மீட்டுப்பெறுகையைச் செய்யும்போது, சேமிப்புக் கணக்குடையவரொருவர் அவரது வைப்புப் புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றுடன், சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட மீட்டுப்பெறுகைப் படிவத்தையும் சேர்த்துச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(x) "ATM" ஒன்றின் மூலமான கொடுக்கல்வாங்கல் எதுவும் அத்தகைய இயந்திரத்தின் பயன்பாடு பற்றிய நியதிநிபந்தனைகளுக்கு அமைவானதாக இருக்கும்.

9. <u>நடப்புக் கணக்கொன்றுக்கான நியதிநிபந்தனைகள்</u>

(i) வங்கியின் கருமநேரங்கள், எச்என்பீயின் (HNB) அந்தந்தக் கிளைகளினால் அறிவிக்கப்பட்டவாறாக இருக்கும்.

(ii) நடப்புக் கணக்கில் உள்ள மீதம் எதன்மீதும் வட்டி செலுத்தப்படமட்டாது.

(iii) பெயரளவிலான கட்டணமொன்று செலுத்தப்படுவதன்மேல், நடப்புக் கணக்குக்கான காசோலைப் புத்தகமொன்று வழங்கப்படும். எனினும், இலங்கை அரசாங்கத்தினாலும், தீர்வையகத்தினாலும் அறவிடப்படும் வரிகளும் ஏனைய கட்டணங்களும் நடப்புக் கணக்கில் பற்றுவைக்கப்படும்.

(iv) காசோலையைப் / காசோலைகளைப் பயன்படுத்துகையில் பின்வருவன தொடர்பில் கவனம்மிகு கரிசனை தேவைப்படும்:

- அதிகாரமளிக்கப்படாத ஆள் எவரும் காசோலைப் புத்தகமொன்றுக்கு அணுக்கம்பெற அனுமதிக்கப்படுதலாகாது. வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்ட காசோலைப் புத்தகத்தைப் பாதுகாத்தலில் வாடிக்கையாளரது கவனக்குறைவால் ஆன பொய்புனையப்பட்ட ஒப்பம் காரணமாக காசோலையொன்று மதிப்பளிக்கப்படும்விடயத்தில், வங்கி பொறுப்பாளியாகக் கொள்ளப்படுதல் ஆகாது.
- காசோலையொன்றை வழங்குகையில் அது எத்தொகைக்காக வமுஸ்கப்படுகின்றதொ அத்தொகை எழுத்துக்களிலும், இலக்கங்களிலும் தெளிவாக எழுதப்படுதல் வேண்டும் என்பதுடன், விடயத்துக்கேற்றவாறு, ஏதேனும் இலக்கத்தை அல்லது எழுத்துக்களை அதன்பின் சேர்ப்பதற்கு வசதியளிப்பதாக இடைவெளி எதுவும் விடப்படுதலும் ஆகாது.
- காசோலையொன்றின்மீது ஏதேனும் திருத்தம் செய்வது அவசியமாகின், வாடிக்கையாளரின் முழு ஒப்பத்தின்மூலம் அத்தகைய திருத்தம் மெய்யுறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.
- கொடுப்பனவுக்காக முன்வைக்கப்படும் தேதிக்கு ஆறு (06) மாதங்களுக்கு அல்லது

அதற்கு மேற்பட்ட காலத்துக்கு முன்னரான தேதியொன்றைக் கொண்டிருக்கும் ஏதேனும் காசோலைமீது, வங்கியானது கொடுப்பனவு செய்ய மறுக்கலாம்.

- பின்தேதியிடப்பட்ட காசோலையொன்று தவறுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டு, வாடிக்கையாளரது கணக்கில் பற்றுவைக்கப்படுமிடத்து, வங்கியானது பொறுப்பெதனையும் ஏற்றுக்கொள்ளாது. பின்தேதியிடப்பட்ட காசோலை என்பது, அது கொடுப்பனவுக்காக முன்வைக்கப்படும் தேதிக்குப் பின்னரான தேதியொன்றைக் கொண்டிருப்பதொன்றாகும்.
- வங்கியானது, தேறப்படாத வருமதிகளுக்கெதிராக காசோலையொன்றைக் கொடுப்பனவுசெய்யப் பிணிக்கப்பட்டதன்று.
- வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்ட காசோலைப் புத்தகம் அல்லது காசோலைத் தாளொன்று தொலைந்துபோயின், அதுபற்றி கிளைக்கு உடனடியாக எழுத்துமூலம் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(v) வாடிக்கையாளரொருவர் தமது கணக்கில் பணம் வைப்புச்செய்வதற்கு, அதுதொடர்பான வடிக்கையாளரின் பிரதி அல்லது பற்றுச்சீட்டின்மீது, இந்த நோக்கத்துக்காக ஏற்பாடு செய்யப்பட்ட வங்கியின் சாசனிப்பு இயந்திரத்தினால் மேலச்சிடப்பட்டாலன்றி, வங்கியின் அலுவலகரொருவரது ஒப்பத்தைப் பெறத் தேவைப்படுத்தப்படுகிறார்.

(vi) ஏற்கனவே வங்கியுடன் ஒழுங்கொன்று செய்யப்பட்டிருந்தாலன்றி, வாடிக்கையாளரொருவர் தமது கணக்கிலிருந்து மீட்டுப்பெறுகையைச் செய்கையில், கிடைக்கப்பெறும் மீதத்தை விஞ்சுவதாகப் பணமெடுத்தல் ஆகாது. எவ்விடயத்திலும், அவரது கணக்கில் அத்தினத்தன்று இருப்பதாகத் தீர்க்கப்பட்ட, கிடைக்கப்பெறும் மீதத்தை விஞ்சுவதாகச் செலுத்தப்படும் அத்தகைய தொகை தொடர்பில், ஏற்புடைத்தான வீதத்தில் வட்டி செலுத்துவதற்கு வாடிக்கையாளர் ஆளாதல் வேண்டும்.

(vii) மேலுமொரு காசோலையை வழங்குதற்பொருட்டு கிடைக்கப்பெறும் மீதத்தைத் தீர்மானிக்கையில், வாடிக்கையாளரொருவர், வழங்கப்பட்டு ஆனால் கொடுப்பனவுக்காக வங்கிக்கு முன்வைக்கப்பட்டிரா எல்லாக் காசோலைகளையும் கணக்கில் எடுத்தல் வேண்டும்.

(viii) வங்கியானது, நடப்புக் கணக்குடையவர் ஒவ்வொருவருக்கும், வாடிக்கையாளரால் வேண்டப்படக்கூடியவாறான அத்தகைய காலஇடைவெளிகளில் கணக்குக்கூற்றொன்றைக் கொடுக்கும், அல்லது வாடிக்கையாளரால் ஆன எவையேனும் அறிவுத்தல்கள் இல்லாவிடத்து, வங்கியால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலஇடைவெளிகளில் கூற்றுக்கள் அனுப்பப்படுதல் வேண்டும். கணக்குக்கூற்று பெறப்படுவதன்மேல், அது கவனமாகப் பரிசீலிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அதனகத்தான ஏதேனும் முரண்பாடு இருப்பின் வங்கிக்கு உடனடியாக அறிவிக்கப்படுதலும் வேண்டும்.

(ix) வழங்கப்படும் சேவைகளுக்காக, வங்கியானது, ஏற்புடைத்தானவிடத்து, தரகுகளை விதிக்கும். மேலும், வங்கியானது, நிராகரிக்கப்பட்ட ஒவ்வொரு காசோலைமீதும் அல்லது எந்தக் காசோலைமீது கணக்குடையவரால் கொடுப்பனவு நிறுத்தப்படுகின்றதோ அந்தக் காசோலைமீது கட்டணமொன்றை விதிக்கும். மற்றும், வங்கியானது, காசோலையொன்றின்மீது கொடுப்பனவு நிறுத்துவதற்காக வாடிக்கையாளர் ஒருவரிடமிருந்து பெறப்பட்ட அறிவுறுத்தல்களைப் பதிவு செய்யும். எனினும், வங்கி அத்தகைய அறிவுறுத்தல்களைப் பின்பற்றத் தவறின், அது பொறுப்பாளியாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

## 10. <u>வைப்புக் கணக்கொன்றுக்கான நியதிநிபந்தனைகள்</u>

(i) வங்கியானது, வைப்பாளரொருவருக்கு, அவரது வைப்பு மூலவைப்பாக இருப்பினும் அல்லது புதுப்பிக்கப்பட்ட வைப்பாக இருப்பினும், அந்த வைப்பின் வழங்குகைக் காலப்பகுதியின்போது அந்த வைப்பை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை விடுவித்தற்கு கடப்பாடெதுவும் உடையதாதல் ஆகாது.

(ii) வைப்புச் செய்யப்பட்ட நேரத்தில் வைப்பாளரொருவருக்கு வங்கியால் வழங்கப்பட்ட காலவைப்புக் கணக்குக்கான சான்றிதழ் அல்லது பற்றுச்சீட்டு எதுவும் கைமாற்றத்தக்கதன்று.

(iii) காலவைப்பொன்று மூலவைப்பாக இருப்பினும் அல்லது புதுப்பிக்கப்பட்ட வைப்பாக இருப்பினும், அந்தக் காலவைப்பில் உள்ள ஏதேனும் பணம் விடுவிக்கப்படுதற்கு, அந்தக் காலவைப்பின் வழங்குகாலம் அல்லது காலப்பகுதி காலாவதியாதல் அத்துடன் அதன் சான்றிதழ்/பற்றுச்சீட்டு முறைப்படி விடுவிக்கப்பட்டு வங்கியிடம் ஒப்படைக்கப்படுதல் என்பன முன்நிபந்தனைகள் ஆகும்.

(iv) வைப்பொன்றின் முதிர்வுத்தேதி காலாவதியானபின்னர் வட்டியெதுவும் திரளுதலாகாது.

(v) வைப்பாளரொருவரால் அந்த வைப்பின் நடப்புக்கால முடிவின்முன் ஆகக்குறைந்தது ஏழு (07) பணிநாட்கள் முன்னராக மாறான அறிவுறுத்தல்கள் வங்கிக்கு வழங்கப்பட்டாலன்றி, அவ்வாறு செய்வதற்கு வங்கி கடப்பாடுகொண்டதாக இல்லாதிருத்தல் வேண்டுமெனினும், அந்தக் காலவைப்பை, அதன்மீது சேர்ந்த வட்டி ஏதேனும் இருப்பின் அதனையும் சேர்த்து இதனகத்து அமைந்துள்ள நியதிநிபந்தனைகளுக்கு அல்லது அவசியமானவை என வங்கி கருதக்கூடிய அத்தகைய ஏனைய அல்லது மேலதிக நிபந்தனைகளுக்கு அமைவாக, வங்கியின் தற்றுணிபில் மேலும் ஒரு காலப்பகுதிக்கு புதிப்பித்தற்கு உரித்தையும் அதிகாரத்தையும் வங்கி கொண்டுள்ளது.

## 11. ஊடுவங்கிச் சேவைக்கான நியதிநிபந்தனைகள்

### (அ) வலைப்பின்னல் வங்கிச் சேவைகள்

(i) "வலைப்பின்னல் வங்கிச் சேவை" வசதியைப் பயன்படுத்தத் தேவையான கடவுச்சொல் / நுகரி அடையாளக்குறி என்பன கடும் இரகசியமாகும் என்பதுடன், எந்தச் சூழ்நிலைகளிலும், எந்நேரத்திலும், எந்த ஆளுக்கும் வெளிவிடப்படுதலும் ஆகாது.

(ii) வாடிக்கையாளரது கடவுச்சொல் /நுகரி அடையாளக்குறி, அதிகாரமளிக்கப்படாத திறத்தவரொருவரது கைகளை எட்டியுள்ளவிடத்து, அது அவரால் உடனடியாக வங்கிக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(iii) "வலைப்பின்னல் வங்கிச் சேவை" வசதியைப் பயன்படுத்தி நெறிப்படுத்தப்பட்ட எல்லாக் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய வங்கியின் பதிவேடுகளும் கூற்றுக்களும், அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள்பற்றி போதுமானவையும் இறுதியானவையுமான எண்பிப்பு எனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அவை எல்லா நோக்கங்களுக்கும் ஒரு நுகரியைப் பிணிப்பனவாதலும் வேண்டும்.

(iv) "வலைப்பின்னல் வங்கிச் சேவைகளைப்" பயன்படுத்தி நுகரியால் கொடுக்கப்பட்ட ஏதேனும் அறிவுறுத்தலை மாற்றியமைப்பதற்கு, நெறிப்படுத்தாதுவிடுவதற்கு அத்துடன்/அல்லது நெறிப்படுத்துதலைத் தாமதப்படுத்துவதற்கு ஆன உரிமையை வங்கியானது தன்னகத்து ஒதுக்கிவைத்துள்ளது.

(v) ஐயம் எதனையும் தவிர்க்கும்பொருட்டு, நடப்புக் கணக்கு/சேமிப்புக் கணக்கு மற்றும் அத்தகைய ஏற்புடைத்தான கணக்குகளை ஆளும் நியதிநிபந்தனைகள் "வலைப்பின்னல் வங்கிச் சேவைகளின்" நுகரியொருவரைப் பிணிக்கும் என இத்தால் உறுதிப்படுத்தப்படுகின்றது.

(vi) "வலைப்பின்னல் வங்கிச் சேவைகளைப்" பயன்படுத்துகை, காலத்துக்குக் காலம் நுனித்தாய்வுக்கு இலக்காக்கப்படும் என்பதுடன், அந்த வசதி, வங்கியால் அதன் முற்றுமுழுதான தற்றுணிபில் மீளப்பெறவும் படலாம்.

(vii) மென்பொருள் அத்துடன் ஆவணத்தொகுப்பு என்பவற்றுக்கான உரிமம் - இலத்திரன் வங்கிச் சேவைகளை (அவை வலைப்பின்னல் வங்கிச் சேவைகளை உள்ளடக்குவனவாக ஆனால் அவற்றுக்கு மட்டுப்படுத்தப்படாதனவாக இருத்தல் வேண்டும்) அவருக்கு விரிவுபடுத்துகையில், வங்கியானது, வாடிக்கையாளரால் தெரிவுசெய்யப்பட்ட கணினிச் சாதனத்தில் வங்கியின் இலத்திரன் வங்கிச் சேவைக்கு அணுக்கம் பெறும்பொருட்டு, இலத்திரன் வங்கிச் சேவைகளுக்கான மென்பொருளையும், ஆவணத் தொகுப்பையும், வங்கியினால் வழங்கப்படும் அவற்றின் எவையேனும் மீளாய்வுகளையும் பயன்படுத்துவதற்கான, கைமாற்றத்தகாத, புறநீங்கலற்ற உரிமமொன்றை வாடிக்கையாளருக்கு வழங்கும். வாடிக்கையாளர் அத்தகைய சாதனத்துக்கும்,

தொடர்புடை அனுப்புகைத் தொடுப்புகளுக்கும் பொறுப்பாதல் வேண்டும். வாடிக்கையாளர் எல்லா வேளைகளிலும் அந்த இலத்திரன் வங்கிச் சேவைச்சாதனங்களை கடுமையான இரகசியமாக வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன் (பாதுகாப்புத் தேவைகளுக்காக இலத்திரன் வங்கி மென்பொருள் தவிர்த்து) வங்கியின் முன்னைய எழுத்துமூலமான சம்மதமின்றி அத்தகைய சாதனங்களைப் பிரதியெடுத்தலோ அல்லது அவற்றுக்கு ஏதேனும் வேறு ஆள் அணுக்கம் பெறுதலை அனுமதித்தலோ ஆகாது. அந்த இலத்திரன் வங்கிச் சேவைச்சாதனங்களும் அவற்றின் எல்லாப் பிரதிகளும் அவற்றிலமைந்த புலமைச்சொத்துரிமைகளும் எல்லா வேளைகளிலும் புறநீங்கலாக வங்கியின் சொத்துக்களாகவிருத்தல் வேண்டும்.

(viii) வலைப்பின்னல் வங்கிச் சேவைகள்மூலம் ஆன கொடுக்கல்வாங்கலொன்று முடிவடைந்தவுடனும், ஏதேனும் தொழில் நுட்பச் செயலிழப்பு காரணமாக, கணக்கின் நித்திய வலைப்பின்னல் மீதி கிடைக்கப்பெறாமைக்கு வங்கி எந்த முறையிலும் எந்தப் பொறுப்பையும் ஏற்கமாட்டாது.

**(ஆ) செல்லிட வங்கிச் சேவைகள்**

(i) செல்லிடத் தொலைபேசி வங்கிச்சேவை வசதியைப் பயன்படுத்துவதற்குத் தேவைப்படும் கடவுச்சொல்/நுகரி அடையாளக்குறி என்பன கடும் இரகசியமானது என்பதுடன், அவை எச்சூழ்நிலைகளிலும், எந்நேரத்திலும், எந்த ஆளுக்கும் வெளிவிடப்படுதலும் ஆகாது.

(ii) வாடிக்கையாளரது கடவுச்சொல்/நுகரி அடையாளக்குறி, அதிகாரமளிக்கப்படாத திறத்தவரொருவரது கைகளை எட்டியுள்ளவிடத்து, அது அவரால் உடனடியாக வங்கிக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(iii) செல்லிடத் தொலைபேசி வங்கிச் சேவை வசதியைப் பயன்படுத்தி நெறிப்படுத்தப்பட்ட எல்லாக் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய வங்கியின் பதிவேடுகளும் கூற்றுக்களும், அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள்பற்றி போதுமானவையும் இறுதியானவையுமான எண்பிப்பு எனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அவை எல்லா நோக்கங்களுக்கும் ஒரு நுகரியைப் பிணிப்பனவாதலும் வேண்டும்.

(iv) செல்லிடத் தொலைபேசி வங்கிச் சேவைகளைப் பயன்படுத்திக் கொடுக்கப்பட்ட, நுகரியொருவரது ஏதேனும் அறிவுறுத்தலை மாற்றியமைப்பதற்கு, நெறிப்படுத்தாதுவிடுவதற்கு அத்துடன் /அல்லது நெறிப்படுத்துதலைத் தாமதப்படுத்துவதற்கு ஆன உரிமையை வங்கியானது தன்னகத்து ஒதுக்கிவைத்துள்ளது.

(v) செல்லிடத் தொலைபேசி வங்கிச் சேவை வசதியைப் பயன்படுத்துகை காலத்துக்குக் காலம் நுனித்தாய்வுக்கு இலக்காக்கப்படும் என்பதுடன், அந்த வசதி, வங்கியால் அதன் முற்றுமுழுதான தற்றுணிபில் மீளப்பெறவும்படலாம்.

(vi) ஏதேனும் தொழில் நுட்பச் செயலிழப்பு காரணமாக, SMS ஒப்படைக்கப்பெறாமைக்கு வங்கி எந்த முறையிலும் எந்தப் பொறுப்பையும் ஏற்கமாட்டாது. செல்லிடத் தொலைபேசி வங்கிச் சேவைகளில் ஈடுபடுவதற்குப் பயன்படுத்தப்படும் சாதனத்தையும் தொடர்புடை அனுப்புகைத் தொடுப்புகளையும் தெரிவு செய்தற்கும், பேணிவருதற்கும் வாடிக்கையாளர் பொறுப்பாதல் வேண்டும்.

(vii) கொடுக்கல்வாங்கலொன்றை நெறிப்படுத்துவதற்காக நாணயமாற்று வீதங்கள் பயன்படுத்தப்படும்போது, "அண்மித்த பெறுமதி" மாத்திரமே SMS கவனயீர்ப்பு மூலம் வெளிக்காட்டப்படும்.

(viii) வங்கியால் மறுவாறு தீர்மானிக்கப்பட்டாலொழிய, ஒருவருக்கு மேற்பட்ட பணிப்பாளரைக் கொண்டுள்ள கூட்டிணைப்பு நிறுவன வாடிக்கையாளர்கள் உட்பட, வியாபாரத் தாபனங்களுக்கு, செல்லிடத் தொலைபேசி வங்கிச் சேவை வசதி கிடைக்கப்பெறமாட்டாது.

**(இ) தன்னியக்கச்செப்பு இயந்திர வங்கித் தொழில்**

வாடிக்கையாளரானவர் -

(i) (இதனகத்துப் பயன்படுத்தப்பட்ட "அட்டை" என்னும் சொல், ஏதேனும் ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, ஒரு பற்று அட்டை என்று பொருள்படுதலும் அதனை உள்ளடக்குதலும் வேண்டும் ஆனால் ஒரு கடனட்டையை உள்ளடக்குதலாகாது என்பதாக) அந்த அட்டையை வங்கியின் ஆதனமாக எல்லா வேளைகளிலும் கருதுதல் வேண்டுமென்பதுடன், வங்கியால் கோரப்படுவதன்மீது நிபந்தனையிலாதும் எவ்வித பிடித்தமும் இல்லாதும் ஒப்படைத்தலும் வேண்டும்.

(ii) மீட்டுப்பெறுகையை அல்லது மாற்றத்தை மேவுவதற்கு போதுமான நிதி கணக்கில் இருந்தாலன்றி எவ்வேளையிலும் அந்த அட்டையைப் பயன்படுத்துதலோ அல்லது பயன்படுத்த முயற்சித்தலோ ஆகாது.

(iii) அட்டை கைமாற்றப்படத்தகாததாகையால் புறநீங்கலாக அவரே அதனைப் பயன்படுத்துதல் வேண்டும்.

(iv) வங்கியால் அல்லது வங்கியின் சார்பாகச் செயற்படும் எவரேனும் ஆளினால், அந்த அட்டையானது நீக்கப்பட்டுள்ளது அல்லது மீட்டுப்பெறப்பட்டுள்ளது என அறிவித்தலொன்று அவருக்குக் கொடுக்கப்பட்டபின்னர் அதனைப் பயன்படுத்துதலோ அல்லது பயன்படுத்த முயற்சித்தலோ ஆகாது.

(v) அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட தனிப்பட்ட அடையாள இலக்கத்தை (PIN), வங்கியின் தன்னியக்கச்செப்பு இயந்திரத்தில் அட்டைப் பயன்பாட்டை வசதிப்படுத்துதற்கென எவரேனும் ஆளுக்கு எச்சமயத்திலும் அத்துடன் எச்சந்தர்ப்பத்திலும் வெளிவிடுதலாகாது.

(vi) அந்த அட்டையின் இழப்பு அல்லது திருட்டு பற்றி வங்கிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டுமென்பதுடன், வங்கியால் விதித்துரைக்கப்படக்கூடியவாறாக அந்த அட்டையின் மாற்றீட்டுச் செலவை பொறுத்தலும் வேண்டும்.

(vii) அட்டையின் இழப்பு அல்லது திருட்டு பற்றிய அல்லது PIN இலக்கத்தின் அதிகாரமிலாக் கைக்கொள்ளுகையைப் பற்றிய அறிவித்தலை அது பெற்றுள்ளது என அந்த வங்கி வாடிக்கையாளருக்கு உறுதிப்படுத்தியதன் பின்னர் நடாத்தப்பெற்ற ஏதேனும் கொடுக்கல்வாங்கல் தவிர்ந்த அந்த அட்டையின் பயன்பாட்டினால் நெறிப்படுத்தப்பட்ட ஏதேனும் கொடுக்கல்வாங்கல்களுக்கான முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(viii) மேலேயுள்ள (vii) என்னும் பந்திக்கு அமைவாக, மீட்டுப்பெறுகைகள் அல்லது/அத்துடன் மாற்றுகைகள் பற்றிய வங்கியின் பதிவை எல்லா நோக்கங்களுக்காகவும் முடிபானதாகவும் பிணிப்பதாகவும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன், அவரது அறிவுடனோ அல்லது அதிகாரத்துடனோ அல்லது அதுவன்றியோ மீட்டுப்பெறப்பட்ட அல்லது மாற்றப்பட்ட ஏதேனும் தொகையை அவரது கணக்கில் வங்கி பற்றுவைக்க அதிகாரமளித்தலும் வேண்டும்.

(ix) தன்னியக்கச்செப்பு இயந்திரத் திரையின்மீது அல்லது அச்சிடப்பட்ட விசாரிப்பு நறுக்கொன்றில் அல்லது பற்றுச்சீட்டுத் துண்டறிவித்தலில் சொல்லப்பட்ட தொகை எத்தன்மைத்தான எந்நோக்கத்துக்கெனவும், வங்கியிலுள்ள வாடிக்கையாளரின் கணக்கின் நிலை பற்றிய முடிவானதெனக் கொள்ளுதலாகாது என்பதை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(x) அந்த அட்டை அல்லது தன்னியக்கச்செப்பு இயந்திரத்தின் பிறழ்செயற்பாடு அல்லது செயலிழப்பு அல்லது தன்னியக்கச்செப்பு இயந்திரத்தில் நிதிபோதாமை என்பவற்றால் எத்தன்மைத்தான ஏதேனும் வகையில் எழும் அல்லது நிகழும் ஏதேனும் இழப்புக்கு அல்லது சேதத்துக்காக வங்கியை இலக்காக்குவதோ, பொறுப்பாக்குவதோ அல்லது வகைசொல்வதற்காளாக்குவதோ ஆகாது.

(xi) மேலே (x) என்னும் பந்தியின் ஏற்பாடுகளின் பொதுமைக்குப் பங்கமின்றியும், அது எவ்வாறிருப்பினும், அந்த அட்டையைத் தன் சொந்த உறுகண்காப்பில் பயன்படுத்துதல் வேண்டுமென்பதுடன், அந்த அட்டையின் பயன்பாட்டின் இடைநேர் விளைவான அல்லது அதிலிருந்தெழும் ஏதேனும் உறுகண்ணை ஏற்றுக்கொள்ளலும் வேண்டும்.

(xii) எத்தன்மைத்தான ஏதேனும் காரணத்துக்காக அந்த அட்டை கொண்டு செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மதிக்கப்படாமைக்கு வங்கி பொறுப்பல்ல என உடன்பட்டுக் கொள்ளல் வேண்டும்.

(xiii) அந்த அட்டை மேற்கொண்டும் தேவைப்படாதபோது அல்லது ஏதேனும் காரணத்துக்காக வங்கியிலுள்ள கணக்கு மூடப்படுமாயின், அதனை நீக்குவதற்காக திருப்பிக் கொடுத்தல் வேண்டும்.

(xiv) அந்த அட்டையை நீக்குவதன்மூலம் அல்லது புதுப்பிக்க மறுப்பதன்மூலம் எந்நேரத்திலேனும் வாடிக்கையாளருக்கு அறிவித்தலின்றி இவ்வசதியை முடிவுறுத்த வங்கி துணிபாதிக்கங்கொண்டுள்ளதென உடன்படுதல் வேண்டும்.

(xv) இலங்கை ரூபாவிலல்லாத வேறு நாணயமொன்றில் மேற்கொள்ளப்பட்ட அட்டைக் கொடுக்கல்வாங்கல் ஒவ்வொன்றும் இலங்கை ஷரூபாவுக்கு பரிமாற்றஞ்செய்யும் தேதியன்று "வீசா இன்ரநாஷனலினால்" ஏற்கப்பட்ட நாணயமாற்று விகிதத்தில் தீர்மானிக்கப்பட்ட ஒரு நாணயமாற்று விகிதத்தில் பரிமாற்றஞ்செய்யப்பட்டதன் பின்னர் அத்துடன் வங்கியால் அறவிடப்படும் மேலதிக நூற்றுவீதமொன்றினால் அது அதிகரிக்கப்பட்டும், "வீசா இன்ரநாஷனலினால்" வங்கிமீது விதிக்கப்படும் கொடுக்கல்வாங்கல் கட்டணம் எதுவும் ஏற்புடைத்தாயின் (அத்தகைய கட்டணம் வங்கியுடன் பங்குபோடப்படலாம்) அதனையும் சேர்த்தும் வாடிக்கையாளரின் கணக்கில் பற்றுவைக்கப்பட உடன்படுதல் வேண்டும்.

(xvi) வெளிநாட்டில் அசையா ஆதனங்களை அல்லது நிதிசார் சொத்துக்களை வாங்குதற்காகக் கொடுப்பனவு செய்வதற்கு அவரது அட்டையைப் பயன்படுத்தலாகாது.

## 12. வேறு நியதிநிபந்தனைகள்

(i) வங்கிச் சேவைகளின் செலவு

(அ) வட்டியும் விதிப்பனவுகளும்
வங்கிக்கு வருமதியான பணங்கள்மீதான வட்டியையும் வங்கியால் வழங்கப்பட்ட சேவைகள்மீதான கட்டணங்களையும் காலத்துக்குக் காலம் வங்கியுடன் எழுத்தில் உடன்பட்டுக்கொள்ள வேண்டியவாறும் அல்லது எழுத்திலான உடன்படிக்கையில்லாதபோது வங்கியால் தீர்மானிக்கப்பட்டவாறு அத்தகைய விகிதத்திலும்.'.விகிதங்களிலும் அத்தகைய அடிப்படையிலும் அத்தகைய நேரத்திலும் வாடிக்கையாளரானவர் செலுத்துதல் வேண்டும்.

(ஆ) காலங்கடந்து வருமதியான தொகைகள்மீதான வட்டி
வங்கியானது, அதன் தற்றுணிபில், செலுத்துமதியாக வரும்போது செலுத்தப்படாத தொகைகள்மீது அல்லது ஏலவேயான உடன்படிக்கையின்றிப் பெறப்பட்ட மேலதிகப் பற்றுத்தொகைகள்மீது ஓர் உயர்ந்த விகித வட்டியை விதிக்க உரித்துடையதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வட்டி வங்கியால் தீர்மானிக்கக்கூடியவாறாக காலஇடைவெளிகளில் கூட்டுச்சேர்க்கவும் படலாம்.

(இ) வட்டியில் மாற்றங்களும் விதிப்பனவுகளும்
வேறுபடுதகு வட்டிவிகித வசதியொன்றின்விடயத்தில், வட்டிவிகிதமானது, அவ்வவ்வுடன்படிக்கையின் நியதிகளுக்கிணங்கச் சீராக்கப்படும். எழுத்தில் வேறு வகையாக உடன்பாடிருந்தாலன்றி, சேவைக்கான கட்டணங்கள், வங்கியால், அதன் நியாயமான தற்றுணிபில், மாற்றப்படலாம்.

(ஈ) செலவுதொகைகளும் செலவுகளும்
வங்கியால் வழமையாக விதிக்கப்படும் எல்லாத் தரகுகளையும் வேறு விதிப்பனவுகளையும், அவை வாடிக்கையாளருக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருப்பினுஞ்சரி அல்லாதுவிடினுஞ்சரி, அத்துடன் இந்தப் பொது நிபந்தனைகளின்கீழ், ஏதேனும் சிறப்பு நிபந்தனைகளின்கீழ் அல்லது வங்கிக்கும் வாடிக்கையாளருக்கும் இடையேயான ஏதேனும் வேறு உடன்படிக்கையின்கீழ், சட்டச்செலவுகள் உட்பட, வங்கியால் உறப்படும் மற்றெல்லாச் செலவுதொகைகளையும், கட்டணங்களையும், கைச்செலவுகளையும் அத்துடன் வேறு செலவுகளையும், அவை கோரப்படுவதன்மீது, உடனடியாக வங்கிக்கு வாடிக்கையாளர் செலுத்துதல் வேண்டும் அல்லது மீளளித்தல் வேண்டும், அத்துடன் வங்கியானது வாடிக்கையாளரின் கணக்குக்கு அல்லது கணக்குகளுக்கு அவற்றைப் பற்றுவைக்க உரித்துடையதாதலும் வேண்டும்.

(உ) வரிகளும் வேறு அறவீடுகளும்
வாடிக்கையாளருடன் வங்கியால் நிறைவேற்றப்படும் கொடுக்கல்வாங்கல்களின்மீது செலுத்தப்படற்பாலனவான மொத்த விற்பனை வரி, தேசிய பாதுகாப்பு அறவீடு, பண்டங்கள் சேவைகள் வரி அல்லது மொத்த விற்பனையை அடிப்படையாகக் கொண்டமைந்த அதையொத்த வேறேதேனும் வரி, முத்திரைத் தீர்வைகள் அல்லது ஏற்புடைத்தனவாயின் பிற அறவீடுகள் யாவற்றையும் மீளளிக்கவும் வாடிக்கையாளர் ஆளாதல் வேண்டும்.

(ii) இறப்பு, தகுதியீனம் அல்லது வங்குரோத்து
வாடிக்கையாளரின் இறப்பு, தகுதியீனம் அல்லது வங்குரோத்தின்மீது, வாடிக்கையாளரின் அல்லது இறந்தவரின் நிறைவேற்றுநராக, நிருவாகியாக அல்லது தனிப்பட்ட பிற பிரதிநிதியாக, அத்துடன் சொத்துக்களின் நம்பிக்கைப்பொறுப்பாளராக, பெறுநராக, அல்லது ஏதேனும் கருதப்படுபயனாளியாக பெயர்சுட்டப்பட்ட ஆளுக்கு அல்லது ஆளினால் கையுதிர்க்கப்பட வங்கி அனுமதிக்குமுன்னராக, அதுபற்றி வங்கியால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய அத்தகைய வடிவத்திலும் பொருளடக்கத்திலும் ஆன (நிருவாகத் தத்துவப் பத்திரங்கள், இயைபான நீதிமன்றக் கட்டளைகள் அல்லது அவற்றை நிகர்த்த அத்தகைய) ஆவணச் சான்றைச் சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்த வங்கி உரித்துடையதாதல் வேண்டும். வங்கி அவ்வாறு கோருமாயின், ஏதேனும் ஆவணச் சான்றின் மூலப்பிரதி (ஏற்புடைத்தானவிடத்து) வங்கியால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஆங்கில மொழிபெயர்ப்புடன் சேர்த்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கூட்டுக்கணக்குடையவர் எவரதும் இறப்பு, தகுதியீனம் அல்லது வங்குரோத்தானது, அத்தகைய நிகழ்வு பற்றிய எழுத்துமூலமான அறிவித்தலொன்றை வங்கி நம்பகரமானது என அது கருதும் மூலமொன்றிலிருந்து பெறும்வரை, அந்நிகழ்வு வங்கியைப் பிணித்தலாகாது. இயைபான அறிவித்தல் பெறப்படுவதன்மேல், வங்கியானது, அதன் திருப்திக்கமைந்த மேலே சொல்லப்பட்டவாறான சான்றைப் பெறும்வரை அந்தக் கணக்கை/கணக்குகளை உறைநிலையிலிட உரித்துடையதாதல் வேண்டும்.

(iii) வெளிநாட்டு நாணய உறுகண் வெளிப்படுத்துகை
வெளிநாட்டு நாணய முதலீடுகளில் பின்னிற்கும் இழப்பு உறுகண்களை அவர் முழுமையாக அறிவார் என வாடிக்கையாளர் இத்தால் வெளிப்படுத்துவதுடன், பின்னிற்கும் நிதி மற்றும் ஏனைய உறுகண்களைப் பொறுத்துக்கொள்ளத் தயாராகவும் முடிந்தவராகவும் இருப்பதுடன் அவை தொடர்பில் வாடிக்கையாளர் உறக்கூடிய ஏதேனும் இழப்புக்காக வங்கியை அவர் எந்த வகையிலும் பொறுப்பாக்கவும் மாட்டார்.

(iv) எதிரீடு செய்தலும் பாத்தியமும்

(அ) பாத்தியம் / எதிரீடு செய்தல் மீதான உடன்படிக்கை
வங்கியின் உடைமையில் வந்துள்ள அல்லது வரக்கூடிய எவையேனும் பிணைப்பொறுப்புகள், ஆதனங்கள்மீது பாத்தியமொன்றை அத்துடன்/அல்லது காப்புரிமையை வங்கி பெற்றுக்கொள்கிறது என வாடிக்கையாளரும் வங்கியும் உடன்படுகின்றனர். மேலே கூறப்பட்டது, பொது அல்லது வங்கியாளரின் பாத்தியம் அல்லது எதிரீட்டுரிமை அல்லது எந்த உரிமைக்கு வங்கி உரித்துடையதாகலாமோ அந்த வேறேதேனும் உரிமைக்குப் பங்கமின்றி இருத்தல் வேண்டும். இதனகத்துள்ள நோக்கத்துக்காக வங்கியால் தேவைப்படுத்தப்படும் அத்தகைய செயலைச் செய்ய அல்லது அத்தகைய ஆவணங்களுக்கு ஒப்பமிட வாடிக்கையாளர் பொறுப்பேற்கிறார்.

(ஆ) காப்புடை உரிமைக்கோரிக்கைகள்

பாத்தியம் மற்றும் காப்புரிமையானது, வாடிக்கையாளருக்கெதிராக வங்கி உரித்துக் கொண்டுள்ளனவான, வங்கியுடனான உறவிலிருந்து எழும் எல்லா, இருந்துவரும், எதிர்கால அத்துடன் நிகழ்தகு உரிமைக்கோரிக்கைகளை (அதாவது அவை இந்த நியதிநிபந்தனைகளின்கீழ் எழுவனவாயினும் அல்லது எவையேனும் சிறப்பு நிபந்தனைகளின்கீழ் எழுவனவாயினும் அல்லது ஏதேனும் உடன்படிக்கை அல்லது கொடுக்கல்வாங்கல் தொடர்பில் எழுவனவாயினும், அவை முதல் தொகையாக, பிணையாக அல்லது வேறு ஏதேனுமாக, உள்ளவாறான அல்லது எதிர்கால அல்லது நிகழ்தகு கொடுக்கல்வாங்கல் ஆக இருப்பினும், அத்துடன் எந்த நாணயத்தில் இருப்பினும், அவற்றின்கீழ் எழுகின்ற உரிமைக்கோரிக்கைகளை) காத்துப்பெற உதவுகின்றது.

(இ) வட்டி அத்துடன் பங்கிலாபக் கூப்பன்கள்

பிணைப்பொறுப்புகள் வங்கியின் பாத்தியம் /உரிமைக்கு அமைவாக இருக்குமிடத்து, வாடிக்கையாளர் அத்தகைய பிணைப்பொறுப்புகளைத் தொடர்புறுத்தும் வட்டி அத்துடன் பங்கிலாபக் கூப்பன்களின் ஒப்படைப்பைக் கோருவதற்கு உரித்துடையராகார்.

(v) வங்கிச்சேவை இரகசியம்

பொதுச் சட்டத்தின்கீழ் ஏதேனும் வாடிக்கையாளர்சார் நிகழ்வுகள் தொடர்பில் இரகசியத்தைப்பேண வங்கி கடமையைக் கொண்டுள்ளது என்பதுடன், அதையொத்த கடப்பாடு 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழிற் சட்டத்தின் 77ஆம் பிரிவின்கீழ் அதன் அலுவலர்கள்மீது சுமத்தப்பட்டும் உள்ளது. எவ்வாறாயினும், நீதிமன்றமொன்றினால் அவ்வாறு செய்யத் தேவைப்படுத்தப்படும்போது, அல்லது அந்த வாடிக்கையாளரால் அதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளவிடத்து, அல்லது அதன் கடமைகளை நிறைவேற்றுகையில் அல்லது சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டிற்கு இணங்கியொழுகும்பொருட்டு, வங்கியானது வாடிக்கையாளரொருவர் அல்லது அவரது கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கணக்குகள் பற்றிய தகவலை வெளிவிடலாம்.

(vi) வெளிவிடுகை

வாடிக்கையாளரானவர், அவர் தொடர்பில் அல்லது அவரது கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கணக்குகள் தொடர்பில் ஏதேனும் தகவலை:

(i) வாடிக்கையாளருக்கு, அல்லது வங்கியால் வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் வங்கிச்சேவை வசதி அல்லது சேவை தொடர்பிலான அவரது கணக்குக்கு/கணக்குகளுக்கு, உறுதியுரைப்பவர் எவருக்கும் அல்லது பிணைப்பொறுப்பு வழங்கும் மூன்றாம் திறத்தினர் எவருக்கும் அல்லது

ii) வாடிக்கையாளர் தொடர்பிலான வங்கியின் எவையேனும் உரிமைகள் அல்லது கடப்பாடுகள் சம்பந்தமாக எவரேனும் சாட்டுணி அல்லது சாட்டுணியாக வரக்கூடியவர், பங்குபற்றுநர் அல்லது ஒப்பந்தத் திறத்தினர் எவருக்கும்,

வங்கி வெளிவிடுவதற்கு இத்தால் அதிகாரம் அளிக்கின்றார்.

(vii) பொறுப்புக் கோட்பாடுகள்

வங்கியானது, அதனது கடப்பாடுகளை நிறைவேற்றுவதில், அதன் பணியாளர் தரப்பிலான வேண்டுமென்றேயான தவறுகைக்கு அல்லது கடும் கவனயீனத்துக்கு மாத்திரமே பொறுப்பாதல் வேண்டும். நிகழ்ந்த இழப்புக்கு அவரது சொந்தத் தவறின்மூலம் (உதாரணமாக, இந்த நிபந்தனைகளில் சொல்லப்பட்டவாறான கடமைகளை மீறுவதன்மூலம்) வாடிக்கையாளர் பங்களித்திருப்பின், வங்கியும், வாடிக்கையாளரும் எந்த அளவுக்கு இழப்பைப் பொறுத்தல் வேண்டும் என்பதை, உடனுதவும் கவனயீனக் கோட்பாடுகள் நிர்ணயித்தல் வேண்டும்.

(viii) தீதறுத்தல்

வாடிக்கையாளருக்கு கடன் அல்லது ஏனைய வங்கிச் சேவை வசதிகளை வழங்கியதால் அல்லது வாடிக்கையாளருக்காக ஏதேனும் வங்கிச் சேவையை நிறைவேற்றியதால் எழுவதாக அல்லது அவை

தொடர்பாக வங்கியால் உறப்படும் அல்லது பொறுத்துக்கொள்ளப்படும் எவையேனும் அல்லது எல்லா உரிமைக்கோரிக்கைகள், கோரிக்கைகள், செயல்கள், சேதங்கள், பொறுப்புக்கள், செலவுதொகைகள், இழப்புக்கள், செலவுகள் மற்றும் ஏனைய தொகைகள் என்பவற்றுக்கு எதிராக வாடிக்கையாளரானவர் வங்கிக்குத் தீதறுத்தல் வேண்டும் என்பதுடன், அவை காரணமாக வங்கியால் செய்யப்படக்கூடிய அல்லது உறப்படக்கூடிய ஏதேனும் அத்தகைய கொடுப்பனவுக்கான கோரிக்கையின்மீது அதனை வங்கிக்கு மீளளித்தலும் வேண்டும்.

வங்கி அதன்தரப்பில் ஏதேனும் வேண்டுமென்றேயான தவறுகையின்றி வாடிக்கையாளரின் அல்லது அவரது பிரதிநிதியின் சட்டத் தகுதியின் எவையேனும் மட்டுப்பாடுகள் பற்றிய அறிவை, அதன்தரப்பில் ஏதேனும் வேண்டுமென்றேயான தவறுகையின்றி, பெற்றுக்கொள்ளாமையான நிகழ்விலிருந்து எழும், வங்கியால் உறப்படும் ஏதேனும் இழப்புக்காக வாடிக்கையாளர் வங்கிக்கு தீதறுப்பார்.

(ix) காலவிதிப்பு

ஒரு கடன் அல்லது அதன்மீதான வட்டி தொடர்பில் வாடிக்கையாளரால் வங்கிக்கு வருமதியான எவையேனும் பணங்கள், காலவிதிப்புக் கட்டளைச்சட்டம் (அத். 68) எவ்வாறிருப்பினும், வாடிக்கையாளரிடமிருந்து அறவிடப்படற்பாலதாதல் வேண்டும் என்பதுடன், சொல்லப்பட்ட பணத்தொகைகளை அறவிடுதற்காக வங்கி வாடிக்கையாளருக்கெதிராக வழக்கிடுதலை காலவிதிப்புக் கட்டளைச்சட்டம் (அத். 68) தடுக்கின்றது என வாதிக்கமாட்டார் எனவும் உடன்படுகின்றார்.

(x) எதிர்பாராச் சம்பவங்கள்

கலவரம், போர், இயற்கை அழிவு, வங்கியின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட ஏதேனும் சூழ்நிலை அல்லது வங்கி பொறுப்பேற்கமுடியாத வேறு நிகழ்வுகள் (உதாரணமாக வேலை நிறுத்தங்கள், கதவடைப்புக்கள், போக்குவரத்துத் தடைகள், சிவில் குழப்பம், உள்நாட்டு, வெளிநாட்டு அரசாங்கங்களின் அல்லது ஏனைய அதிகாரநிறுவனங்களின் செய்கைகள் அவை சட்டநிலையாயினும், அல்லது நிகழ்நிலையாயினும், ஏதேனும் சட்டம் அல்லது ஒழுங்குவிதி, சந்தைச் சீர்குலைவு அல்லது ஏதேனும் கற்கை/தீர்வுகாணல் முகவரகம் அல்லது மத்திய வைப்பகத்தின் செயல் என்பவற்றின் தேவைப்பாடுகள்) என்பவற்றை உள்ளடக்குவதாக ஆனால் அவற்றுக்கு மட்டுப்படுத்தப்படாத, எவையேனும் எதிர்பாராச் சம்பவங்கள் நிகழுமிடத்து, அவற்றுடன் தொடர்புடையதாக அல்லது அவற்றால் ஏற்பட்ட ஏதேனும் இழப்பிற்கு அல்லது நிறைவேற்றவியலாமைக்கு வங்கியானது பொறுப்பாதல் ஆகாது.

(xi) தகவல்களும் அறிவித்தல்களும்

(அ) வாடிக்கையாளரது பெயர், முகவரி அத்துடன் ஏனைய விபரங்கள் பற்றிய எவையேனும் மாற்றங்களுடன், வங்கியுடன் தொடர்புடையதாக எவரேனும் ஆளுக்கு அளிக்கப்பட்ட எவையேனும் பிரதிநிதித்துவத் தத்துவங்களை (குறிப்பாக, அற்றோணித் தத்துவமொன்று) அல்லது எவரேனும் ஆளின் அதிகாரத்துக்கு அளிக்கப்பட்ட எவையேனும் பிரதிநிதித்துவத் தத்துவங்களை முடிவுறுத்துகை அல்லது அவற்றுக்கு திருத்தம் கொண்டுவருவது பற்றி வங்கிக்கு வாடிக்கையாளர் தாமதமின்றி எழுத்தில் அறிவித்தல் வேண்டும். இவ்வறிவித்தலானது, ஏதேனும் பொது இடாப்பில் உள்ளதும், பிரதிநிதித்துவங்கள் அத்தகைய பொது இடாப்பில் பதியப்பட்டு அவற்றின் ஏதேனும் முடிவுறுத்துகை அல்லது அவற்றுக்கான திருத்தம் அத்தகைய இடாப்பில் இடப்பட்டும் இருக்குமிடத்து உள்ளதுமான வாடிக்கையாளரின் விபரங்களுக்கான ஏதேனும் மாற்றத்துக்கு உரியவாறு ஏற்புடைத்தாகின்றது.

(ஆ) வாடிக்கையாளரின் வர்த்தகம், வியாபாரம் அல்லது தொழில் அத்துடன் நிதிநிலைமை என்பன பற்றி அல்லது அவை தொடர்பிலான பொருள்சார்ந்த மாற்றம் பற்றி ஆன எல்லா விபரங்களும் வாடிக்கையாளரால் வங்கிக்கு வழங்கப்படும்.

(இ) வாடிக்கையாளரின் நிதித் தத்துவத்தைப் பாதிக்கக்கூடியதான ஏதேனும் வழக்கு நடவடிக்கை அல்லது சாத்தியப்படு வழக்கு நடவடிக்கை பற்றிய விபரங்கள் வாடிக்கையாளரால் வங்கிக்கு வெளிவிடப்படுதல் வேண்டும்.

(ஈ) வங்கியானது, ஏதேனும் அறிவித்தல், கடிதத்தொடர்பு, சாதனம் அல்லது ஆவணத்தை வாடிக்கையாளருக்கு சாதாரண அஞ்சல்மூலம், நேரே கையளிப்பதன்மூலம், தொலைநகல்மூலம், தொலையஞ்சல்மூலம் அல்லது மின்னஞ்சல்மூலம் (வங்கி அறிந்துள்ள, வாடிக்கையாளரின் கடைசியாக அறியப்பட்ட அஞ்சல் முகவரி, தொலைநகல் இலக்கம், தொலையஞ்சல் இலக்கம்,

மின்னஞ்சல் முகவரிக்கு), தனது தற்றுணிபில், பொறுப்புச்சாராது அனுப்புவதற்கு உரித்துடையதாகும் என்பதுடன், அத்தகைய ஏதேனும் தொடர்பு (உள்நாட்டில் எனின்) அஞ்சற்படுத்தப்படுவதிலிருந்து இரு (02) நாட்களின்பின்னரும், (வெளிநாட்டில் எனின்) அஞ்சற்படுத்தப்படுவதிலிருந்து ஐந்து (05) நாட்களின்பின்னரும், (தொலைநகல்மூலம் அல்லது தொலையஞ்சல்மூலம் அல்லது மின்னஞ்சல்மூலம் எனின்) அனுப்பப்படும் போதும், நேரே கையளிப்பதன்மூலம் எனின் ஒப்படைக்கப்படுவதன்மேலும், வாடிக்கையாளரால் பெறப்பட்டுள்ளது எனக் கருதப்படுதலும் வேண்டும்.

**13. முடிவுறுத்துகை**

(i) வாடிக்கையாளரின் முடிவுறுத்துகை உரிமை

வங்கியும் வாடிக்கையாளரும் வேறுவகையிலான எழுத்துமூல முடிவுறுத்தல் ஏற்பாடொன்றுக்கு உடன்பட்டிருந்தாலன்றி, வாடிக்கையாளரானவர், எந்த நேரத்திலும், நியாயமான எழுத்திலான முன்னறிவித்தல்மூலம், முறைப்படி ஒப்பமிடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட பணிப்பாணையிலிருந்து எழும் வியாபார உறவை முழுமையாக அல்லது குறித்த ஏதேனும் வியாபார உறவை முடிவுறுத்தலாம். ஆயின் எவ்வாறாயினும், அத்தகைய முடிவுறுத்தலுக்கு முன்னராக வங்கிக்குத் திரண்டுள்ள உரிமைகளை அத்தகைய முடிவுறுத்தல் எதுவும் பாதித்தல் ஆகாது.

(ii) வங்கியின் முடிவுறுத்துகை உரிமைகள்

(அ) அறிவித்தலின்மேல் முடிவுறுத்துகை

முறைப்படி ஒப்பமிடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட பணிப்பாணையிலிருந்து எழும் எந்த வியாபார உறவு தொடர்பில் காலப்பகுதியொன்று அல்லது முடிவுறுத்துகை ஏற்பாடொன்று எழுத்தில் உடன்பட்டுக்கொள்ளப்படவில்லையோ அந்த ஏதேனும் வியாபார உறவை முழுமையாக அல்லது ஏதேனும் குறிப்பான உறவை வங்கியானது, அதன் அபிப்பிராயப்படி நியாயமானதாகவிருக்கும் அறிவித்தலொன்றை வழங்குவதன்மேல் எந்நேரத்திலும் முடிவுறுத்தலாம். அறிவித்தற் காலப்பகுதியை நிர்ணயிப்பதில், வங்கியானது, செயல்முறைச் சாத்தியமானவிடத்தெல்லாம் வாடிக்கையாளரின் அறியப்பட்ட நியாயபூர்வமான கரிசனைகளைக் கருத்திற்கொள்ளும்.

(ஆ) நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியைக் கொண்டிராக் கடன்களினதும் வசதிகளதும் முடிவுறுத்துகை

எக்கடன்கள், அல்லது கடன்வசதிகள் அல்லது வங்கிச் சேவைவசதிகள்/ஒப்புதல்கள் தொடர்பில் எழுத்துமூலம் நிர்ணயிக்கப்பட்ட ஒரு காலப்பகுதி அல்லது ஒரு முடிவுறுத்துகை ஏற்பாடு உடன்பட்டுக்கொள்ளப்படவில்லையோ அக்கடன்கள், அல்லது கடன்வசதிகள் அல்லது வங்கிச் சேவைவசதிகள்/ஒப்புதல்கள் வங்கியின் தற்றுணிபில் முன்னரான அறிவித்தலின்றி எந்நேரத்திலும் முடிவுறுத்தப்படலாம்.

(இ) நியாயமான ஏதுக்காக முன்னறிவித்தலின்றிய முடிவுறுத்துகை

வாடிக்கையாளரின் அறியப்பட்ட நியாயபூர்வமான கரிசனைகளுக்கு உரிய கவனத்தைக் கொடுத்தபின்னர், அவருடன் வியாபார உறவை வங்கி தொடருவதை ஏற்றுக்கொள்ளமுடியாததாக ஆக்குகின்ற நியாயமான ஏது உள்ளவிடத்து, முறைப்படி ஒப்பமிடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட பணிப்பாணையிலிருந்து எழும் வியாபார உறவின் முழுமையினது, அல்லது ஒரு குறிப்பான உறவின், அறிவித்தலற்ற முடிவுறுத்துகை அனுமதிக்கப்படுகின்றது.

(ஈ) முடிவுறுத்தலையடுத்து கொடுத்துத்தீர்த்தல்

வியாபார உறவின் அல்லது வசதிகளின் முடிவுறுத்துகையின்மீது, வாடிக்கையாளரிடமிருந்து வங்கிக்குச் சேருமதியான எல்லாத் தொகைகளும் கடப்பாடுகளும், கோரப்படுவதன்மேல், உடனடியாக வருமதியானவையாகவும் செலுத்துமதியானவையாகவும் வருதல்வேண்டுமென்பதுடன், வங்கிக்கும் வாடிக்கையாளருக்கும் இடையிலான எல்லா வெளிநாட்டு நாணயமாற்றுக் கொடுக்கல்வாங்கல்களும் வேறு சார்ந்தெழும் கொடுக்கல்வாங்கல்களும் வங்கியின் தற்றுணிபில் விரைவில் முடிவுறுத்தப்பட்டு, வங்கியால் நிர்ணயிக்கப்படும் அப்போதைய சந்தைப் பெறுமதியில் வருமதியானவையாகவும் செலுத்துமதியானவையாகவும் வருதலும் வேண்டும். வங்கியின்மாட்டான வாடிக்கையாளரின், நிலுவையிலுள்ள ஏதேனும் எதிர்கால அல்லது எதிபாராப் பொறுப்புத் தொடர்பில், வங்கி தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய நியதிகள்மீது போதிய பணஒழுங்கை

வாடிக்கையாளர் உடனடியாக ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(உ) உரிமைகள் பேணல்

மேலே கூறப்பட்ட எவையேனும் ஏற்பாடுகளின்கீழ், ஏதேனும் வியாபார உறவின் முற்றுமுழுமை அல்லது குறிபான உறவு வங்கியால் முடிவுறுத்தப்படுகையானது, அத்தகைய முடிவுறுத்துகைக்கு முன்னர் வங்கிக்குத் திரண்டுள்ள உரிமைகளைப் பாதித்தலாகாது.

**14. சாட்டுகை**

இதன்கீழான உரிமைகளுள் எவற்றையும் அல்லது எல்லாவற்றையும் வாடிக்கையாளரின் முன் அங்கீகாரம் பெறாது இன்னொரு திறத்தவருக்குச் சாட்டுதல் செய்தற்கு வங்கி உரிமையுடையதாதல் வேண்டும்.

**15. ஏற்பாடுகளின் வலிதின்மை**

இதனகத்தான ஏற்பாடு எதுவும் எந்த நேரத்திலும் எந்த வகையிலும் சட்டமுரணானதாக, வலிதற்றதாக அல்லது வலுவுக்கிடவியலாததாக வருமெனில், அத்தகைய சட்டமுரண்பாடு, வலிதின்மை அல்லது வலுவுக்கிடமுடியாமை, இதனகத்தான ஏனைய ஏற்பாடுகளை பலமிழக்கச்செய்வதாதலோ, பாதித்தலோ ஆகாது.

**16. விட்டுவிடுகை**

ஏதேனும் ஒரு குறிப்பான சந்தர்ப்பம் அல்லது நிகழ்வு தொடர்பில், இந்த நியதிநிபந்தனைகளுள் எவற்றினதும் வங்கியினாலான பொறுதி, கவனயீனம் அல்லது விட்டுவிடுகையெதுவும், அதன்பின்னர் அவற்றைக் கடுமையாக வலுவுக்கிடுதற்கான வங்கியின் உரிமைகளைப் பங்கப்படுத்துதல் ஆகாது. வங்கியாலான விட்டுவிடுகை எதுவும் அது எழுத்தில் இருந்தாலன்றி பயனுறுவதாதல் ஆகாது.

**17. நியாயாதிக்கமும் ஆளும் சட்டமும்**

(i) நியாயாதிக்க இடம்

வாடிக்கையாளருக்கெதிராக ஏதேனும் பிற நாட்டில் அல்லது பிற நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுப்பதற்கான வங்கியின் உரிமைக்குப் பங்கமின்றி, வாடிக்கையாளரானவர் புறநீங்கலற்ற கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தை விலக்கவியலாதவாறு ஏற்றுக்கொள்கிறார் (வங்கிக்கெதிராகவும்கூட இலங்கை நீதிமன்றங்களில் மாத்திரமே வழக்கிடமுடியும்).

(ii) பொருள்முறைச் சட்டம்

இதனகத்துக் கருதப்படும் வியாபாரத் தொடர்பு, வாடிக்கையாளர் கணக்குகள், கருமங்கள் அத்துடன் கொடுக்கல்வாங்கல்களும் பணிப்பாணையும் இலங்கைச் சட்டங்களால் ஆளப்படுதல் வேண்டும்.

**பொருள்கோடல்**

இந்தப் பொது நியதிநிபந்தனைகளில் ஒருமை எண்ணைக் குறிக்கும் சொற்கள் பன்மையை உள்ளடக்குதலும் மறுவாறும், ஆண்பாலைக் குறிக்கும் சொற்கள் பெண்பாலையும், ஆட்களைக் குறிக்கும் சொற்கள் கூட்டுத்தாபனங்கள் அத்துடன் கம்பனிகளையும் உள்ளடக்குதலும் வேண்டும்.

வசதிக்காக மட்டும் தலைப்புக்கள் சேர்க்கப்பட்டுள்ளன என்பதுடன், அவை இந்த ஆவணத்தைப் பொருள்கொள்வதைப் பாதித்தலாகாது.

ஏதேனும் நியதிச்சட்ட ஏற்பாடு, ஒழுங்குவிதி, விதி, கட்டளை அல்லது பணிப்பு பற்றிய குறிப்பு, காலத்துக்குக் காலம் மீள ஆக்கப்பட்ட, திருத்தப்பட்ட, நீடிக்கப்பட்ட, சேர்ப்புச் செய்யப்பட்ட அல்லது பதிலீடு செய்யப்பட்ட அத்தகைய ஏற்பாடு, ஒழுங்குவிதி, விதி, கட்டளை அல்லது பணிப்பு பற்றியதொரு குறிப்பை உள்ளடக்குதல் வேண்டும்.